# அரசுத்தேர்வுகள் இயக்ககம் - சென்னை-6

## பொதுமக்கள் / மாணவர்களுக்கான இணையவழி சேவைகள்.

இதுவரை தபால்வழி விண்ணப்பங்களாக பெறப்பட்டு வந்த இத்துறை சேவைகளான மதிப்பெண் சான்றிதழ்களின் இரண்டாம்படி, மதிப்பெண் சான்றிதழ்களின் சான்றிட்ட நகல், இடப்பெயர்வுச் சான்றிதழ் - பிற மாநிலங்களில் உயர்கல்வி பயில (Migration Certificate) இணையவழி விண்ணப்பங்களாக பெறுவதற்கான மென்பொருள் வடிவமைக்கப்பட்டு பொதுமக்கள் / மாணவர்களின் பயன்பாட்டிற்கு தயார் நிலையில் உள்ளது. பொதுமக்கள் / மாணவர்கள் இவ்வியக்கக இணையதளத்தில் (www.dge.tn.gov.in) விண்ணப்பிக்கலாம்.

- **மதிப்பெண் சான்றிதழ்களின் இரண்டாம்படி (Duplicate Marks Certificate)**
    - **தபால்வழி விண்ணப்ப நிலை**: மாணவர்கள் / பொதுமக்கள் அச்சடிக்கப்பட்ட விண்ணப்பத்தில் விவரங்களை பதிவு செய்து தபால் /நேரடியாக அந்தந்த மாவட்ட உதவி இயக்குநர் அலுவலகத்தில் விண்ணப்பிக்க வேண்டும். உதவி இயக்குநர் அலுவலகத்திலிருந்து சென்னை, தலைமையலுவலகத்தில் விண்ணப்பங்கள் பெறப்பட்டு இரண்டாம்படி மதிப்பெண் சான்றிதழ் அச்சடிக்கப்பட்டு உதவி இயக்குநர் அலுவலகம் மூலம் மாணவர்கள் / பொதுமக்களுக்கு சான்றிதழ் அனுப்பி வைக்கப்படுகின்றன.

    - **இணையவழி விண்ணப்பநிலை** : மாணவர்கள் / பொதுமக்கள் இணையத்தில் விண்ணப்பிக்கவேண்டும். இணைய வழி விண்ணப்பங்கள் பெறப்பட்டவுடன் விவரங்கள் சரிபார்க்கப்பட்டு இணைய வழி விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு சான்றிதழ் அனுப்பிவைக்கப்படும்.

- **மதிப்பெண் சான்றிதழ்களின் சான்றிட்ட நகல் / Certified Copy of Mark Certifcate மற்றும் இடப்பெயர்வுச் சான்றிதழ் ( பிற மாநிலங்களில் உயர்கல்வி பயில ) - / Migration Certificate (For pursuing Higher Education in other States)**
  - **தபால்வழி விண்ணப்ப நிலை** : மாணவர்கள் / பொதுமக்கள் அச்சடிக்கப்பட்ட விண்ணப்பத்தில் விவரங்களை பதிவு செய்து தபால் /நேரடியாக சென்னை, தலைமையலுவலகத்தில் பெறப்பட்டு சான்றிதழ் அச்சடிக்கப்பட்டு மாணவர்கள் / பொதுமக்களுக்கு விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு சான்றிதழ் அனுப்பி வைக்கப்படுகின்றன.

  - **இணையவழி விண்ணப்பநிலை** : மாணவர்கள் / பொதுமக்கள் இணையத்தில் விண்ணப்பிக்கவேண்டும். இணைய வழி விண்ணப்பங்கள் பெறப்பட்டவுடன் விவரங்கள் சரிபார்க்கப்பட்டு இணைய வழி விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மின்னஞ்சல் முகவரிக்கு E-Certificate-ஆக சான்றிதழ் அனுப்பிவைக்கப்படும்.

- **தபால்வழி விண்ணப்பத்தில் மாணவர்கள் / பொதுமக்களுக்கு ஏற்படும் சிரமங்கள்:**

  **மாணவர்கள் / பொதுமக்களுக்கு ஏற்படும் சிரமங்கள்**: தபால்வழி விண்ணப்பத்தில் விண்ணப்பங்கள் துறையை அடைவதற்கு காலவிரயம் ஏற்படுவதுடன் விண்ணப்பங்களை கண்டறிவதில் சிரமமும், விண்ணப்பநிலை குறித்த விவரங்களை பயனாளர்கள் அறிந்துகொள்ள இயலாத நிலையும் உள்ளது. இதனால் விண்ணப்பதாரர்கள் இவ்வலுவலகத்திற்கு நேரிடையாக வருகைப்புரிகின்றனர்.

**துறை அலுவலர்களுக்கு ஏற்படும் சிரமங்கள்** : அச்சடிக்கப்பட்ட விண்ணப்பத்தை பூர்த்தி செய்யும்போது மாணவர்கள் / பொதுமக்கள் அடிப்படை விவரங்களை பூர்த்தி செய்யாமல் /பிழையுடன் பூர்த்தி செய்து விண்ணப்பித்து விடுவதால் அவர்களது விண்ணப்பங்களின் மீது நடவடிக்கை எடுக்க இயலாமல் திரும்ப அனுப்பும் நிலை உருவாகிறது.

- **இணையவழி விண்ணப்பத்தால் விளையும் நன்மைகள்:**

இணைய வழி விண்ணப்பத்தில் விண்ணப்பங்கள் பூர்த்தி செய்தவுடன் இத்துறையை வந்தடைகிறது, விண்ணப்பநிலை குறித்த விவரங்களை விண்ணப்பதாரர்கள் விண்ணப்ப எண்ணைக்கொண்டு அறியும் வசதியும், விண்ணப்பநிலை குறித்த விவரங்கள் விண்ணபத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படுகிறது. அடிப்படை விவரங்கள் பூர்த்தி செய்யாமல் விண்ணப்பத்தை சமர்ப்பிக்க இயலாது என்பதால் விவரங்கள் பெறப்படவில்லை என்ற காரணங்களுக்காக விண்ணபத்தை நிராகரிக்கும் நிலை முற்றிலும் தவிர்க்கப்படும் மாணவர்கள் / பொதுமக்களுக்கு சான்றிதழ் குறித்த நேரத்தில் வழங்கப்படும். விண்ணபதாரர்களுக்கு வீண் அலைச்சல் தவிர்க்கப்படும்.

**ஒம்/-**

**இயக்குநர்**

**நாள்: 20.12.2023**